தினமலர் | திருச்சி | 21.12.2023

# நிறுவனங்கள் சிறக்க புதிய உத்திகள் செயல்படுத்தணும்

**திருச்சி, டிச. 21–**

திருச்சி இந்திய மேலாண்மை நிறுவனம் (ஐஐஎம்) சார்பில் 25வது ஆண்டு மேலாண்மை அமைப்பின் உத்தி எனும் கருத்தரங்கம் நடந்தது.

ஐஐஐஎம் இயக்குனர் பவன்குமார்சிங் கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார். சி–டாட் முதன்மை செயல் அலுவலர் ராஜ்குமார் உபாத்யாய் பேசுகையில், ''நாட்டின் பொருளாதார மேம்பாடு, மக்கள் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.




திருச்சி ஐஐஎம்மில் நடந்த 25வது ஆண்டு மேலாண்மை அமைப்பின் உத்தி எனும் கருத்தரங்கில் பேராசிரியர் சேகர் சவுத்திரிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை ஐஐஎம் இயக்குனர் பவன்குமார்சிங் வழங்கினார்.

தனியார் நிறுவனங்கள் மேம்பாடு வளர்ச்சி காண சிறந்த தலைமை பண்பு, புதிய திட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசு, தனியார் நிறுவனங்களில் புதிய உத்திகளை செயல்படுத்தாமல் வளர்ச்சி காண முடியாது. வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு, விருப்பத்திற்கு ஏற்ற வகையில் செயல்பட்டால்தான் தனியார் நிறுவனங்கள் போட்டிகளை சமாளித்து வெற்றி காண முடியும்'' என்றார். ஜார்ஜியா பல்கலைக்கழக பேராசிரியர் சார்லஸ் தனராஜ் பேசியது: தொழில் நிறுவனங்கள் பொருள் உற்பத்திக்கு தரும் முக்கியத்தை சுற்றுப்புற சூழலுக்கும் தர வேண்டும்.

எதிர்காலத்தில் பணிக்கு செல்பவர்களை விட பலருக்கு பணி வழங்கும் தொழில்முனைவோர் அதிகரிக்க வேண்டும்'' என்றார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பேராசிரியர் சேகர் சவுத்திரிக்கு வழங்கப்பட்டது. ஐஆர்எம்ஏ இயக்குனர் உமாகாந்த் தாஸ், அருணாதிய சகாய், பேராசிரியர் கார்த்திக் தண்டபாணி உட்பட பலர் கலந்து கொண்டனர். இணை ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நன்றி தெரிவித்தார்.

Source : Dinamalar

Date : 21/12/2023

Page No. : 07